- Access to healthcare facilities is not easy or uniform across the population. Enrolment in an acceptable health insurance plan is usually expensive.
- As a foreign citizen, the ability to earn a livelihood is limited by the immigration rules.
- Men and women interact differently in western cultures. Hence one must familiarize oneself with the nature of interpersonal relations in a foreign county to avoid feelings of insecurity.

## Take an informed decision

The difficult experience that are associated with all the above problems are a significant strain on any marital relationships, let alone a new one. A failure to adjust to a new life and to be open-minded about new ideas can be a direct cause of marital strain; hence one must make an informed decision, taking future possibilities into account.

## Before finalizing a proposal, the boy/girl should

- Try to know the to-be spouse well, learn about



where he/ she lives and develop reasonable expectations.

- Communication is the key to a successful marriage. Understand what you are getting into.
- Do not take any decision in haste and do not get pressurized
- Do not finalize matters over long distance, on phone or through e-mails.
- Do not blindly trust any bureau, agent, tout or a middleman.
- Do not finalize matters in secrecy;
- Verify if the status of the spouse is actually as represented,
- Employment details: qualification and post, salary, address of office, employers and their credentials
- Immigration status, type of visa, eligibility to take spouse to the other country
- Financial status (to be verified with the employer)

- Properties said to be owned, residential address
- Financial commitment like study loan, vehicle loan, housing loan
- Criminal antecedents, if any
- Family background

## Check the following documents relating to the spouse : (Before Marriage)

- Visa, passport, voter or alien registration card , Social security number , Tax returns for the preceding 3 years ,Bank account papers, Property papers.

## Insist on the following:

## (Before Marriage)

- Registration of the marriage along with social marriage
- Doing all the paperwork for issue of visa and other required formalities at your end. Keep all the original papers with yourself.
- Affidavit from the spouse stating present marital status.
- Insist on a health insurance cover before arriving in the new overseas residence.
- Make sure that the two persons to be married meet personally and interact freely and frankly in a comfortable atmosphere to make up their minds as many times as they feel necessary.

## Precautions for the Girl

## (Before Proceeding abroad)

- Try to arrange for a bank account for the girl in the foreign country for her to be able to withdraw money in emergency.

- Keep a list of contact details of neighbours, friends, relatives, husband's employer in the foreign country, police, ambulance, the nearest Indian Embassy or High Commission handy.

- The photocopies of all important documents including passport, visa, bank and property documents, marriage certificate, wedding photos and other essential papers and phone numbers must be kept with parents or other trustworthy people in India or abroad.

(to be continued…)

Disclaimer: Though we have tried our best to cover all points, it may differ from case to case. Always proceed with caution.



**DEIVANAI S**
Probono Advocate
From Karaikudi



May everyone in the world be happy

# A Good rest house in Palani for devotees on a pilgrimage



**Palaniappa Chettiar and Meenakshi Aachi Viduthi** is a rest house built, not for profit in Palani and founded by Thiru Palaniappan, who has created a fund source from his income towards future administration of the Viduthi.

There is Annadhanam at the premises on first Monday and on Kiruthikais of every month. Donation for Annadhanam for Birthdays and wedding anniversaries of parents and children of your family is welcome from all devotees and 80G Income Tax exemption available for the same.

Manager of the Rest House is Thiru A. Annamalai, Phone: 919865230277 (Whatsapp) can be contacted for any queries regarding Palani temple darshan. No advance payment required for staying in the rest house.

## Special features of the Rest house:

- 300 metres from PathaVinayagar temple. The resthouse is located in the street next to the street where the girivalam takes place.
- Parking facility inside the rest house.Auto or Car pickup and drop facilities can be arranged.
- Presence of solar water heater for 24 hour water facility, Purified drinking water facility.
- Generator and UPS backup on power outage. Bigger rooms are available for large groups of devotees to stay.

**Rent**

**1. Double room A/C : Rs 850 with additional bed at Rs 150**
**2. Double room non AC : RS 600 with additional bed at Rs 100**

**Address:**

Pazha. Se.Palaniayappa Chettiyaar Meenachi Aachi Annadhana Viduthi
102. East Street, IdumbanSannidhi, Itteri road,
Ponni's Lodge behind, Adivaaram Palani-624601
Website: www.cpviduthi.com Email: cpviduthi@gmail.com

# சங்கச்சுரங்கம் புகழ் - 2

## பென்னி குயிக் பொங்கல்



**தை பொங்கல், மாட்டு பொங்கல், காணும் பொங்கல், குலதெய்வ கோவில் பொங்கல் என்று நாம் அறிந்திருந்தாலும், பென்னி குயிக் பொங்கல் கேள்விப்படாததுதான். யார் இந்த பென்னி குயிக்?**

முல்லை பெரியாறு அணையை கட்டிய, ஜான் பென்னி குவிக் சென்னை அரசின் பொதுப்பணித்துறைப் பொறியாளர் மற்றும் செயலாளராக 1895 ஆம் ஆண்டு அக்டோபர் 10 அன்று ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இராணுவப்பணிப் பொறியாளராக இந்தியாவிற்குப் பணிக்கு வந்தார்.

1876ல் தாது வருட பஞ்சம் இந்தியாவில் ஏற்பட்டது. பலர் இறந்து போயினர். வெள்ளைக்கார அரசாங்கம் ஏதேனும் செய்தாக வேண்டும் என்று, பல வருடங்களுக்கு முன்பு கிடப்பில் போடப்பட்ட முல்லை பெரியாறு அணை திட்ட வரைபடத்தை தூசு தட்டியது. அணை கட்ட 75 லட்சம் (125 வருடம் முன்பு) என்று மதிப்பீடு செய்யப்பட்டது



பென்னி குயிக் தலைமையில் திருவாங்கூர் அரசரிடம் 999 வருடங்களுக்கு அணை கட்டும் இடம் தமிழகத்திற்கு என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது. மிகவும் கரடு முரடான இடம், தேள் பாம்பு என்று அனைத்து விஷ உயிரினங்களும் வசித்த இடத்தில் வேலை தொடங்கியது. விஷக்கடியில் 400 பேர் இறந்து விட்டதாக தகவல் உள்ளது. இப்படி பணம் பொருள் உழைப்பு உயிர் கொண்டு மூன்று வருடங்களாக கட்டிய அணையை அதன் பின்னர் பெய்த பெரு மழை வெள்ளம் அடித்து கொண்டு சென்றது. உடனே பென்னி குயிக் மீது குறை கூறுபவர்கள் கூற, அரசாங்கமும் இதற்கு மேல் அணை கட்ட நிதி ஒதுக்க இயலாது என்று கை விரித்து விட்டது. மிகுந்த செல்வச்செழிப்புள்ள பெண்ணை மணந்த பென்னி குயிக் மனைவியுடன் இங்கிலாந்து சென்று அவருடைய மற்றும் அவர் மனைவியுடைய சொத்துக்களை விற்று மீண்டும் தமிழகம் வந்து சொந்த செலவில் அணை கட்டினார்.

தேனீ, சிவகங்கை, இராமநாதபுரம் ஊர்களுக்கு இன்றும் தண்ணீர் தேவையை இந்த அணை தான் நிறைவேற்றுகிறது. அதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அணையை ஒட்டியுள்ள கிராமங்களில் உள்ள வீடுகளில் பென்னி குயிக் புகைப்படம் உள்ளது. மேலும் இன்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு, பென்னி குயிக் என்றும், பென்னியம்மாள் என்றும் பெயர் சூட்டுகின்றனர். இத்துடன் வருடம் தோறும் அவர் பிறந்த நாளில் கிராமத்து தெய்வங்களுக்கு போன்று பென்னி குயிக் பொங்கல்

வைத்து படையல் இடுகின்றனர்.

பென்னி குயிக் ஒரு கிரிக்கெட் வீரர். அவர் 20000 ஓட்டங்களும் 200 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார்.

அவர் இங்கிலாந்து சென்று உயிர் துறந்த போது, அவர் கல்லறையில் கிரிக்கெட் பற்றிய விவரங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டது. ஏனெனில் யாருக்கும் அவர் செய்த முல்லை பெரியாறு அணை பற்றி தெரியவில்லை. அவர் வலக்கை செய்த கொடை இடக்கைக்கு தெரியவில்லை. அவர் இறந்து நூறு வருடங்களுக்கு பிறகு இங்கிலாந்து தேவாலய முறைப்படி அவர் கல்லறையை இடிப்பதற்கான முயற்சி மேற்கொண்டனர். இதனை எவ்வாறோ அறிந்து கொண்ட நம் மக்கள் குரல் எழுப்ப, இங்கிலாந்து அரசாங்கத்துக்கு ஒன்றும் புரியவில்லை. இங்கிலாந்தில் இருந்து ஒரு தூதுக்குழு தமிழகம் வந்து பென்னி குயிக்கின் பெருமை பார்த்து வாயடைத்து போனது. கல்லறை இடிக்க மாட்டோம் என்று உறுதி அளித்தது.

மேலும் பல தமிழர்கள் நிதி திரட்டி இங்கிலாந்தில் பென்னி குய்க்கிற்கு மார்பளவு சிலை வைத்தனர்.

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று. குறள் எண் 236**

**பென்னி குயிக் - நீர் இருக்கும் வரை நீர் இருப்பீர்!**



**PR.C.Sethuraman**
(Master of Banking Management)
Nomura (Investment Banking Operations), Mumbai
Native: Valayapatti

Wishing

'Mumbai Nagarathar'

Magazine all success



With Best Compliments from

Interport Clearing Services,

Mumbai

# கவிதை



## அவரவர் கடமையை அவரவர் செய்வோம்

கதிரவன் உதயம்
செய்கிறான்
கரங்களால் உலகை
அணைக்கிறான்
புதியதாய் உலகம்
உதித்திடப்
புத்துயிர் மலர்ந்து
தளிர்க்குது! (1)

கதிரவன் ஒளியைப்
பெற்றுக்
காரிருள் இடையே பாய்ச்சி
மதிகவர் காட்சி தந்திடும்
மதியும் கடமை
செய்யுது! (2)

விதியென ஒதுங்கி டாமல்
மேகமும் மழையைப்
பொழிய
புதியதாய் மரங்கள்
தழைத்துப்
பொலியுது உலகம்
சிரிக்குது! (3)

கதிரவன், நிலவும் வானும்
கடமையைச் செய்வ தாலே
விதிப்படி உலகம் சுழலுது!
மீறிடச் சுழற்சி
தவறிடும்! (4)

கதிரவன் கடமையை
மதியும்
களிதரும் மதியின்
கடமையை
கதிரவன் தானும் மாற்றிடில்
கதிகலங் கிடுமே
உலகம்! (5)

ஒருவர் பெற்ற வெற்றியை

ஒருவர் பெற்றிட
நினைப்பதும்
ஒருவர் வாழ்ந்த
வாழ்வினை
ஒருவர் வாழ நினைப்பதும் (6)

நடக்கும் வாழ்வைக்
கெடுப்பதாம்!
நமது வாழ்க்கை
நாம்செயக்
கிடைக்கும் இன்பம்,
இன்பமே!
கீழாய்ச் சிதையும்
துன்பமே! (7)



**அரியக்குடி மெய்யப்பன்**

மும்பையில், இந்திய சுங்கத் துறையில் முக்கிய பதவிகள் வகித்த அவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர். அமுதசுரபி, இலக்கியச்சோலை போன்ற இதழ்களில் கவிதைக்காகப் பரிசு பெற்றவர். ‘தென்னரசு’ அச்சு இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

ARVIND
CHETTINAD SNACKS

செட்டிநாடு ஸ்நாக்ஸ்









பாரம்பரிய சுவையில் பலகார வகைகள்

சுபகாரியங்களுக்கு ஆர்டரின் பெயரில் செய்து தரப்படும்.

**Mfrs :**
South India Agro Food Industries, A-38, Sidco Industrial Estate, Kappalur,
Madurai - 625 008. PH : 0452 - 2489596, +91 9360026920
E-Mail : thinna37@yahoo.co.in

**Our Branches :**
Madurai - +91 93451 26920 | Karaikudi - +91 84899 42190
Devakottai - 9486486423

ARVIND
CHETTINAD SNACKS
www.arvind-snacks.com

# ஐராவதி

## நதிக்கரையோரம்

இக்கதையில் வரும் அனைத்து கதாபாத்திரங்களும் கற்பனையே, யாரையும் குறிப்பிடுவன அல்ல. இக்கதையில் வரும் சில வரலாற்று நிகழ்வுகள் 'The Chettiars in Burma' (Sean Turnell - 2005) எனும் ஆய்வு கட்டுரையிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது.

### அத்யாயம் 7:

### பர்மாவில் ஒரு காலை பொழுது

### வருடம் 1875

நாட்கள் சென்றன. இன்னும் ஓரிரவில் பர்மா சென்றடைந்து விடலாம், என மாலுமி அறிவித்தார். இனங்கொள்ள முடியாத உற்சாகம் ராமநாதன் மனதில் பெருக்கெடுத்தது.

அந்நேரத்தில் சிறிது கண் அயர்ந்ததில், ராமநாதனுக்கு ஒரு கனா. அவர்கள் ஊரில், ஒரு பெரிய பெரிய



மாடமாளிகையில் பெற்றோர், மனைவி, மக்கள் சூழ, ஆடம்பரமாய் ஊர் மக்களுக்கு ஒரு விருந்தோம்பல். அவ்வண்ணம் சென்று கொண்டிருக்கும் போது, ஊர் பெரியோர் சிலர் ராமநாதனை அணுகி "ராமநாதா,நம் ஊர் சிவன் கோவிலுக்கு அடுத்த வருடம் குடமுழுக்கு செய்வதற்கு காரியங்கள் மும்மரமாய் செல்வதை நீ அறிவாய். அதற்கு புள்ளி வரி தவிர்த்து, அவர் அவர்களால் முடிந்த பங்களிப்பையும் பெற்று வருகிறோம். நீ தானேப்பா, அந்த எல்லாம் வல்ல சிவன் அருளால், பர்மாவில் பல கடைகள் வைத்து கொடி கட்டிப் பறக்கிறாய். ஆதலால் உன் பங்களிப்பையும், கண்டிப்பாக இந்த ஊர் பொதுக் காரியத்தில் எதிர்பார்க்கிறோம்."

"நானே உங்களிடம் இது பற்றி நாளை பேசலாம் என்று யோசித்திருந்தேன். நடந்தவை, நடப்பவை, நடக்கப் போகிறவை, எல்லாம் அவன் செயல். என்னால் இயன்ற காணிக்கையாய், ரூ. 5,000 வழங்குகிறேன், அண்ணே!" என்றான் ராமநாதன்.

விஸ்வநாதன் குரல் கேட்டு எழுந்தான் ராமநாதன். "இன்னும் ஓரிரு மணி நேரத்தில், பர்மா கரையை சென்றடைந்து விடுவோம். அதை சொல்லத்தான் வந்தேன்". இதோ இவ்வளவு நாள் காத்திருந்து, அவனது தலைமுறையினரையும், அவனது ஊரையும் செல்வச் செழிப்போடு மேம்படுத்த போகிற, அந்த பூமி அவன் கண்ணெதிரில் தெரிந்தது.

## வருடம் 1900

இதோடு ராமநாதன் பர்மா வந்து 25 வருடங்கள் ஆயின. இந்த நெடுங்காலத்தில் தொழில் பயின்று, சொந்தமாக முதல் வட்டிக்கடை ப்யபோங்கில் தொடங்கி, தற்பொழுது

பர்மாவில் மட்டும் ஐந்து வட்டிக் கடைகள் நடத்தி வந்தான். அவனுக்கு அடுத்து தொழிலை பார்த்துக் கொள்வதற்காக, அவனது மூத்த மகனையும் பர்மா அழைத்து வந்து, தொழில் பயிற்று வித்தான். ஊரில் இளைய மகனும், மகளும் பள்ளிப் படிப்பு பயின்று வந்தனர்.

ஊரில் நினைத்தபடியே பெரிய வீடு கட்டி, அவர்கள் குடும்பத்தின் மேற்பார்வையிலுள்ள சக்தி விநாயகர் கோவிலுக்கு குடமுழுக்கு செய்திருந்தான்.

அன்று வழக்கம் போல ஒரு காலைப் பொழுது. எம்பெருமானை வணங்கிவிட்டு, கிட்டங்கியை திறந்தான். தூரத்தில் **Maung,** அவனது கிட்டங்கியை நோக்கி வருவது போல தோன்றியது. அவர்களுக்குள் நடந்த பேச்சுவார்த்தை, நம் புரிதலுக்காக தமிழில் பிரசுரிக்கப் படுகிறது.

**Maung** ஒரு அரிசி சாகுபடி செய்யும் விவசாயி. ராமநாதனின் கிட்டங்கியிலிருந்து பல முறை கடன் வாங்கி, தவறாமல் செலுத்தி இருக்கிறான்.

"வணக்கம் செட்டியாரே!"

"சொல்லுப்பா **Maung.** எப்படியிருக்க?"

"நான் இப்போ கேக்க வந்ததை குடுத்தா, நல்லா இருப்போம்"

"அத நீ கேக்குறத பொறுத்தப்பா"

"உங்களுக்கு தெரியும், என் அப்பாவுக்கு இரு மகன்கள். மூத்தவன் நான். இளையவன் என் தம்பி **Mting.** எனது தந்தையாருக்கு பிறகு சொத்தை பிரித்துக் கொள்வதில் எங்கள் இருவருக்குள்ளும் பிரச்சனை.

எனக்கு ஒதுக்கப்படவுள்ள நிலத்தின் ஒரு பகுதியில், இப்போது நான் விவசாயம் செய்ய வேண்டும் என நினைக்கிறன். 25 வருடம் முன்பு ரூ. 65 இருந்த நூறு கூடை அரிசி விலை, இன்று ரூ. 95 செல்கிறது. இந்நேரத்தில் சாகுபடி செய்வதால் நல்ல மகசூல் கிடைக்கும் என்று நினைக்கிறன். இதற்கு தானியம் வாங்கி, பயிரிட தங்களிடம் இருந்து பணம் பெற வந்தேன்."

"இந்தப் பகுதி நிலத்தின் பட்டா உன் பெயரில் மாற்றப் பட்டுவிட்டதா?"

"இல்லை. இன்னும் என் தந்தை பெயரில்"

"உனது தந்தையாரின் எல்லா சொத்திலும் உனது தம்பிக்கும் பாதி பகுதி பெற உரிமை உள்ளது. இன்னும் உங்களுக்குள் யாருக்கு என்ன பகுதி என்று முடிவு செய்யவில்லை. அப்படியிருக்கையில், நீ பயிரிடப்போகும் பகுதி உனது தம்பிக்கு என்று பிரிந்துவிட்டால்? நீ அடமானம் வைக்கப் போகும் நிலத்திற்கு உனது தம்பி ஒப்புக்கொண்டு கையெழுத்திடுவானா?"

"அது பற்றி சரியாக கூற முடியாது."

"சரி, சிறிது நேரம் யோசித்து விட்டு, இரு நாளில் கூறுகிறேன்" என்றான் ராமநாதன்.

ராமநாதனுக்கு சட்டென்று ஒரு யோசனை உதித்தது. அவ்வூரிலியே வேறு ஒரு வட்டிக்கு கடை வைத்திருக்கும் பழனியப்பன் கிட்டங்கி நோக்கிச் சென்றான்.



**Maruthappan Swaminathan (Nerkuppai)**

***is a corporate banker by profession and settled in Mumbai with Annapoorna (Spouse) and Saishri (Daughter). He loves to discuss stock markets and movies.***



# LANDSCAPE AND GARDENING










**KANNAGI GANESH KUMAR - 9600126999**

**For Residential, Commercial and Industrial Establishments - CHENNAI**



# குறுக்கெழுத்துப் போட்டி

## (செட்டிமக்கள் உறவு முறைகள்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | ✕ |
| | ✕ | ✕ | ✕ | ✕ | | | 3 |
| 4 | | | | | ✕ | | 5 |
| | | | 6 | | ✕ | | |
| | | ✕ | | | ✕ | 7 | |
| | | ✕ | | | ✕ | ✕ | |
| 8 | | | | 9 | | | |
| ✕ | 10 | | | | | ✕ | ✕ |

## விடைகளுக்கான குறிப்புகள்

(அடைப்பு குறிக்குள் எழுத்துக்களின் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.)

### மேலிருந்து கீழ்:

1. மூத்த சகோதரி (3)

5. கணவரின் சகோதரர் (5)

6 தாயின் சகோதரர் (4)

### இடமிருந்து வலம்:

1. பெற்றவள் (3)

2. சுற்றத்தாரை குறிப்பிடுவது (5)

4. தாயின் இளைய சகோதரி (5)

8. மூத்த சகோதரரின் மனைவி (8)

10. மூத்த சகோதரியின் கணவர் (5)

### கீழிருந்து மேல்:

7. மகளின் கணவர் (5)

8. தகப்பனார் (5)

9. தாயின் மூத்த சகோதரி (5)

10. மூத்த சகோதரர் (4)

### வலமிருந்து இடம்:

3. “பிள்ளைப் பேறில்லாதவர்கள்” கூட்டிக் கொள்வார்கள் (3)

6. மகனைக் குறிக்கும் மற்றொரு சொல் (3)

## விடைகள்:

### மேலிருந்து கீழ் :

1. ஆச்சி.
5. கொழுதினார்.
6. அம்மான்.

### கீழிருந்து மேல்

7. மாப்பிள்ளை
8. அப்பச்சி
9. பெரியத்தா
10. அண்ணன்

### இடமிருந்து வலம்:

1. ஆத்தா
2. தாயபிள்ளை.
4. சின்னத்தா
8. அண்ணன் பெண்டிர்
10. அய்த்தான்

### வலமிருந்து இடம்:

3. பிள்ளை
6. அரசு.

– திருமதி சொர்ணவல்லி மெய்யப்பன்



இவர் ஓர் இல்லத்தரசி. ‘தென்னரசு’ அச்சிதழில் கட்டுரை, துணுக்குகள், குறுக்கெழுத்துப் புதிர்கள், சமையல் குறிப்புகள் எழுதியுள்ளார். ‘தென்னரசு’ இதழ் தயாரிப்புக் குழுவில் பணியாற்றியுள்ளார்.

With Best Compliments From

# Sharpline Group Of Companies

## Specializing In:

- CNC Machine Tool Retrofitting
- Manufacturer of ASQUITH BUTLER, UK Floor Borer Machine
- UT Automation Systems For GE
- Aerospace & Defence Component Manufacturing
- Technical Vocational Training Products of CHRISTIANI, Germany
- Sales Representation of AMO, Austria
- Laser Calibration Services With RENISHAW and EASYLASER Systems



Locations: Navi Mumbai / Chennai

Corporate Office: No. 19, TTC Industrial Area, Vishnu Nagar, Digha,
Navi Mumbai – 400 708. Phone - +91 22 6835 8900; Fax - +91 22 6835 8920;
E-mail: mktg@sharplinegroup.com. Website: www.sharplinegroup.com

Christiani Sharpline EXCELLENCE IN TECHNICAL TRAINING

Sharpline™ AUTOMATION

FORWARD MANUFACTURING COMPANY PVT. LTD.



# இப்படியும் இந்தியா

## இவர்கள் முடி சேகரித்து உயிர்வாழ்கிறார்கள்

**மும்பை போன்ற பெரு நகரங்களில் குப்பை பொறுக்கி உயிர் வாழ்பவரைப் பார்த்திருக்கிறோம், படித்திருக்கிறோம். ஆனால் மனிதர்களின் தலைமுடியைச் சேகரித்து உயிர் வாழ்வோரைப் பற்றிப் படித்திருக்கிறீர்களா? ஆமாம், இது பெங்களூரில் நடக்கிறது.**

முடிகளைச் சேகரிப்பவர்கள் நூற்றுக்கணக்கான டன் குப்பைகளில் இருந்தும், முடிகளை சேகரிக்கிறார்கள். வீடு வீடாகச் சென்றும் சேகரிக்கிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் சராசரியாக 100 முதல் 200



முடிகள் தலையில் இருந்து விழுகின்றன. சென்னை மும்பை பெங்களூரு போன்ற கோடிக்கணக்கான, லட்சக்கணக்கான மனிதர்கள் வாழும் பெருநகரங்களில் எவ்வளவு முடி சேரும் என்று எண்ணிப் பாருங்கள்.

இப்படிச் சேர்த்த முடி நீளத்தையும் வண்ணத்தையும் பொருத்து கிலோவுக்கு 1300 முதல் 2500 வரை விலை பெறும்.

ஆனால் ஒருவர், ஒரு நாளைக்கு சேகரிக்கும் முடி 50 கிராம் அளவே இருக்கும். ஒரு மாதத்தில் சேர்க்கும் முடி ஒன்று முதல் ஒன்றரை கிலோவாக இருக்கும். ஒரு குடும்பத்திலேயே பலர் சேகரிப்பதால் வாழ்க்கை நகர்கிறது. இதனால் மாத வருமானம் ரூபாய் 10 ஆயிரத்தை தொடுகிறது இந்த வேலை செய்யும் 500க்கும் மேற்பட்டவர்கள் ஒரே காலனியாக பெங்களூரில் வசிக்கிறார்கள்.

சேகரித்த முடியை ஏற்றுமதி செய்யும் தொழில் ரூபாய் 7000 முதல் 8000 கோடி வரை பெறுகிறது. இதையே மேம்படுத்தி நாம் நேரடியாக விற்றோம் ஆனால் இந்த வருமானம் இரட்டிப்பாகும், என்று ஒரு கணிப்பு கூறுகிறது.



இப்படி சேகரித்த முடியை வகைப்படுத்தி,மேம்படுத்தி,300 கிராமிற்கும் குறைவான ஒரு விக் (wig) தயாரித்தோமானால் அது 2000 ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய்வரை விலை போகிறது.

இந்தியாவிலேயே இதை வகைப்படுத்தி மேம்படுத்தும் தொழில்நுட்பத்தை அரசு கொண்டு வருமானால் இந்தத் தொழில் பன்மடங்கு முன்னேற்றம் அடைய வாய்ப்பு இருக்கிறது.



**அரியக்குடி மெய்யப்பன்**

மும்பையில், இந்திய சுங்கத் துறையில் முக்கிய பதவிகள் வகித்த அவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர். அமுதசுரபி, இலக்கியச்சோலை போன்ற இதழ்களில் கவிதைக்காகப் பரிசு பெற்றவர். ‘தென்னரசு’ அச்சு இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

# Galaxy Group of Companies

## Home of Innovation

**GALAXY RESEACRH TECHNOLOGIES**

**( www.grttech.com)**

*Research and Development on cutting edge technologies Specialist in material synthesis.*

---

**MEMFILL TECH PTE LTD.**

**(www.memfill.in)**

*Indigenous Hollow fiber membrane technology for water and waste water treatment Doing turnkey projects especially in effluent and sewage treatments.*

---

**SAI RESEARCH SOLUTION**

**(www.sairesearch.biz)**

*Converting fruit waste into activated carbon for energy application Producing green hydrogen generation.*

---

**GALAXY PETROCHEMCIALS SDN BHD**

**(www.galaxy.my)**

*Converting Zinc ash to Zinc oxide*
*Working in rubber, tyre and gloves industry*

---

**H2NEXT PTE LTD**

**(www.h2next.in)**

*Producing green hydrogen from AEM electrolyser First indigenous industrial scale membrane production in India.*

---

**SONA GALAXY TECHNOLOGIES**

**(www.sonagal.com)**

*Waste to Wealth Manufacturing oxide nanomaterials for pharma industry*

*Reg off:* 2/578, Thayagam 4th Street
Thanthai Periyar Nagar
Karaikudi – 630002
Sivaganga District, Tamilnadu

*Off Address:* Alagappa University
PG Hostel Campus
Karaikudi – 630003. Ph: +4565228099
Mobile: +91-9444877555 / +65-81188413




# சிறைச்சாலை வாடகைக்குக் கிடைக்கிறது

'உங்கள் ஜாதகத்தில் செவ்வாய், சனி போன்ற கிரகங்களின் போக்கினால் உங்களுக்குச் சிறைக்குப் போகும் வாய்ப்பிருக்கிறது' என்று ஜோசியர் சொன்னால்,அதை நிவர்த்தி செய்ய உத்ரகாண்ட் மாநிலத்தில் உள்ள ஹல்துவானியில் சிறைத்துறையினரே வாய்ப்பளிக்கிறார்கள்.

ஆமாம், சிறை வளாகத்துக்குள்ளேயே பயன்படுத்தப்படாத தங்குவதற்கென கட்டப்பட்ட அறைகளை (abandoned quarters), தற்காலிகச் சிறை களாக மாற்றி ஓர் இரவுக்கு ரூபாய் 500 என்று வாடகைக்கு விடுகிறார்கள். ஜாதகத்தில் உள்ள குறையைப் போக்குவதற்கென இந்தச் சிறைக்கு வருபவர்கள் 'சுற்றுலாக் கைதிகள்' (Tourist prisoners) என அழைக்கப் படுகிறார்கள்.

இவர்களுக்கு கைதிகளுக்கான சீருடையும், சிறையில் சமைத்த உணவும் கூட வழங்கப்படுகிறது. அவர்கள் விரும்பினால் பூட்டும் போடப்படுகிறது. இப்படி தங்கினால் ஜாதகத்தில் உள்ள தோஷம் நிவர்த்தி ஆகிவிடும் என்ற நம்பிக்கை நிலவுகிறது. மேலதிகாரிகளின் ஒப்புதல் உடனேயே இது நடைபெறுகிறதாம்.



**அரியக்குடி மெய்யப்பன்**
மும்பையில், இந்திய சுங்கத் துறையில் முக்கிய பதவிகள் வகித்த அவர் ஓர் எழுத்தாளர், கவிஞர், பேச்சாளர். அமுதசுரபி, இலக்கியச்சோலை போன்ற இதழ்களில் கவிதைக்காகப் பரிசு பெற்றவர். 'தென்னரசு' அச்சு இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.



# Murungai Keerai Soup

Murungai keerai is rich in iron and is very effective in treating anemia. Iron content is thrice as compared to spinach.It increases the hemoglobin levels. Especially regular intake is advisable for women.

Murungai keerai helps in controlling diabetes and lowering cholesterol levels which is a must now a days in today's lifestyle.

It also detoxifies the body and helps in hair growth.





● Now, we will see a good murungai keerai soup recipe which can be consumed regularly.

## Ingredients

| | |
|---|---|
| **1. Murungai keerai** | **2 handful** |
| **2. Tomato** | **2 medium** |
| **3. Onion** | **1 big** |
| **4. Curry leaves** | **little** |
| **5. Black Pepper** | **2 tsp (crushed)** |
| **6. Saunf (fennel seeds)** | **1 tsp** |
| **7. Hing Powder** | **a pinch** |
| **8. Salt as per taste** | |

First wash the murungai leaves and keep it aside.

Keep the pressure cooker in gas stove and pour 3



tsp of oil plus 1 tsp of ghee.

Once the oil is heated put the fennel seeds, hing powder and  crushed black pepper.

Later add sliced onions and curry leaves with salt. Saute for a minute and then add the sliced tomato and  saute for 2 minutes. Now add the murungai leaves, cover the lid for 1 minute.

Once all get slightly cooked add 4 glasses of water and cover the cooker lid for 3 whistles and after opening the cooker drain the soup.

Now murungai clear soup is ready. It tastes like mutton soup.

Profile: Annapurani Sathappan, Home Maker.



**Annapurani Sathappan**
Nerkuppai

# நாட்டுக்கோட்டை நகரத்தார் அன்னதான அறக்கட்டளை - தேவகோட்டை

## ஸ்ரீ காளஹஸ்தி நகரவிடுதி

சிவத் தலங்களில் மேலான சிறப்புடையது திருக்காளத்தி என்னும் ஸ்ரீ காளஹஸ்தி ஆகும். இது பஞ்சபூதத் தலங்களில் வாயுத் தலமாகும். இங்கே வாயு (காற்று) வடிவில் சிவபெருமான் காளத்திநாதராகக் கோவில் கொண்டுள்ளார்.அம்பாள் ஞானப்பூங்கோதை. திண்ணப்பன் கண்ணப்பன் ஆக அருள் பெற்ற தலம். 30 வருடமாக மஹா சிவராத்திரி அன்று ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு அன்னதானம் செய்து வருகிறார்கள். இங்கு நகரத்தார்கள் மற்றும் தமிழ் மக்கள் வந்து தங்கிச்செல்ல நகரவிடுதி இல்லை.

ராகு கேது பரிகாரத்திற்காக ஏராளமான தமிழ் மக்கள் இங்கு வந்து செல்கிறார்கள். அவர்கள் வசதிக்காகவும் தொடர்ந்து அன்னதானம் சிறப்பாகச் செய்து வரவும் ஒரு நகரவிடுதி கட்டும் முயற்சியில் ஏடுபட்டுள்ளார்கள். ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளிப்போருக்கு மூன்று நாட்கள்,இரண்டு லட்சம்



அளிப்போருக்கு ஏழுநாட்கள் மூன்றுலட்சம் அளிப்போருக்குப் பத்து நாட்கள் கட்டணமின்றித் தங்க அறைகள் வழங்கப்பெறும். சிவராத்திரித் திருவிழா பத்து நாட்களும் அறை நன்கொடை யாளருக்கு மட்டுமே அறைகள் தரப்படும். 25000 ரூபாய்க்கு மேல் நன்கொடை வழங்குபவர் பெயர் கல்வெட்டில் இடம்பெறும்.

நகரத்தார்கள் நகர விடுதிகளுக்கு பெரும் பொருளை கொடுத்தவர்கள், கொடுத்து கொண்டிருப்பவர்கள். இந்த நகர விடுதிக்கும் உங்கள் பங்கை அளியுங்கள், சிவன் அருள் பெறுங்கள்.

தொடர்பு எண் - 99942 21285

கார்த்திகேயன்

# KALOPSIA?

(n.)The delusion of things being more beautiful than they actually are.


A small child i saw,
So lively and raw,
He had with him a wooden toy
I wonder what made him shriek with joy?

Juggling it into the air,
I saw him go down into the trees,
He had with him a usual flair
Of carrying himself like a breeze..

Running to his mother,
He hugged her tight,
She gave him a smooch and another,
For love has all right!

Next, he went to the jungle men,
And tried to help them cut sticks,
They were tough and uneven,
He tried, tried but it pricks!

Time for dinner!
It's rice and meat,



He sits like a winner
On the leaf-bed seat!

After and later,
He plays with his friends
For he has no homework
And no setting trends.

Then he goes on to sleep,
For he has a new day waiting,
New fruits to reap
And new reasons to liveee!!



**Nethra Ravichandran**
Standard : Grade 10
Native: Kadiyapatti

**மும்பை நகர விடுதி**



**தொடர்பு கொள்ள**
மும்பை நகர விடுதி மேனேஜர்
**திரு. பழனியப்பன் ராமநாதன்**
மொபைல் நம்பர்:
**77770 27334**

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

இந்த மின் இதழ் மாதந்தோறும் உலகெங்கும் இருக்கும் நகரத்தார்களைச் சென்றடையும் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

கிட்டதட்ட 25,000 முதல் 50,000 நகரத்தார்கள் வரை எளிதாக சென்றடையும். ஆதலால் இந்த இதழில் உங்கள் நிறுவன விளம்பரங்கள் இடம் பெற்றால் அது பல ஆயிரக்கணக்கான நகரத்தார்களுக்கு உடனடியாக சென்றடையும் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு பக்கம் விளம்பரத்திற்கான கட்டணம் – ரூபாய் 600. ஒரு வருடத்திற்கு, 12 இதழ்களுக்கான விளம்பர கட்டணம் ரூபாய் 6000.

## தொடர்பிற்கு

contact.mumbainagarathar@gmail.com